ROYAL CARE HOSPITALS
making life better

H-2022-0901




## DEPARTMENT & SPECIALITIES

- Accident & Emergency
- Anesthesiology & Pain Clinic
- Blood Bank
- Bone Marrow Transplant
- Cardiology & Interventional Cardiology
- Cardiothoracic Surgery
- Critical Care Medicine
- Dermatology
- Dental & Maxillofacial Surgery
- Endocrinology & Endocrine Surgery
- Endogynecology (Laparoscopy)
- ENT, Head & Neck Surgery
- General & Laparoscopic Surgery
- Fertility Care Clinic
- Fetal Medicine
- Haematology
- Internal Medicine & Diabetology
- Interventional Pulmonology
- Interventional Radiology
- Interventional Neuro Radiology
- Liver Transplant
- Master Health Checkup
- Medical Gastroenterology
- Medical Oncology
- Minimally invasive spine surgery
- Nephrology
- Neurology
- Neurosurgery
- Nuclear Medicine
- Orthopaedic & Trauma Surgery
- Ophthalmology
- Plastic, Reconstructive & Cosmetic Surgery
- Physical Medicine and Rehabilitation
- Paediatric & Neonatal Surgery
- Psychiatry & Clinical Psychology
- Radiology & Imaging Sciences
- Radiation Oncology
- Renal Transplant Unit
- Rheumatology
- Surgical Gastroenterology
- Surgical Oncology
- Spine Injury Rehabilitation Centre
- Urology
- Vascular Surgery

24/7

## SERVICES

Ambulance
Blood Bank
Emergency & Trauma care
Intensive Care
CCU, MICU, NICU, SICU, ROU, PICU
Imaging Center
Laboratory Medicine
Pharmacy
Poison Information Centre

**Royalcare Super Speciality Hospital Limited**
No:1/520, Neelambur, Sulur Taluk, Coimbatore - 641 062, Tamilnadu.
Ph: 0422-222 7000, 22 77 000, Web: www.royalcarehospitals.in


# Rotary District News 2982



• Issue 1 • July 2024


"A sign of a **GOOD LEADER** is not how many followers you have, but how many **LEADERS YOU CREATE**"



Rotary

SALEM GOPI HOSPITALS
KIDNEY CARE




சிறுநீரக பாதிப்புகள்
கேள்விகளும், பதில்களும்!

இந்த புத்தகத்தில், நமது சிறுநீரகங்களை எப்படி பாதுகாப்பாக வைத்துக் கொள்வது. என்பது பற்றி கேள்வி மற்றும் பதில் பாணியில் எழுதி இருக்கிறோம். இதை உங்களுக்கு வழங்குவதில் நாங்கள் மகிழ்ச்சி அடைகிறோம்

Scan to Buy

சேலம் கோபி மருத்துவமனை
23, பீ. ராமகிருஷ்ணா சாலை, சேலம், தமிழ்நாடு 636007
CONTACT US 0427 266 6444
bit.ly/kidneybookfaq

@salemgopihospital @salemgopihosp www.salemgopihospital.in

Table of
# Contents

04 RI President
05 RI Director
06 District Governor
14 Sarithiram Pesuvom
19 AGTS
35 Pithamagal
40 Eethal
49 Hope On Wheels

Rotary

RI President
# Stephanie A. Urchick
Message



பேரன்புடைய ரோட்டரி உறுப்பினருக்கு,

ரோட்டரியில் உள்ள நம்மவர்களுக்கு, ரோட்டரி அனுபவம்தான் முக்கியம். நான் ரோட்டரியில் சேர்ந்த போது என்னுடைய சங்கம் என்ற உணர்வை ஏற்படுத்தியது. என்னால் அடுத்தக்கூட்டம் வரைக்காத்திருக்க இயலவில்லை. நடுவில் சேவைத்திட்டத்தில் கலந்து கொண்டேன். என்னைப் பொறுத்தவரை ரோட்டரியின் இலக்கணம் என்னவென்றால் ரோட்டரி என்பது அர்த்தமுள்ள நிறுவனம். சொந்தம் என்ற உணர்வைக் கொண்ட நிறுவனம். என்னுடைய சிறப்பு உறுதிமொழி என்னவென்றால் ஒவ்வொரு ரோட்டேரியரும், ரோட்டரேக்டரும் ரோட்டரி குடும்பத்தைச் சேர்ந்தவர் என்பதை உணர வைத்தல் தான். இந்தக் கடிதத்தை நான் ஏன் எழுதுகிறேன் என்றால் நீங்கள் ரோட்டரி உறுப்பினராகவும், ரோட்டரியை உங்கள் வாழ்வில் ஒரு அம்சமாக வைத்துள்ளமைக்கு நன்றி சொல்வதற்காகத்தான்.

**Our Action Plan** - "நம் செயல்திட்டம்" என்ற கருவியை உங்களிடம் பகிர்ந்து கொள்கிறேன். உங்கள் ரோட்டரி அனுபவம் மேலும் மேம்படும்.

**Impact.** : சேவைகளின் தாக்கத்தை அதிகப்படுத்துவது.

**Expand:** மக்களைச் சென்றடைய விரிவுபடுத்துவது, **Adapt** : மாறும் உலகத்திற்கு தகுந்தாற் போல் மாற்றிக் கொள்வது.

**Enhance** : உறுப்பினர்களின் அனுபவங்களை புதிய உயரங்களுக்குக் கொண்டு சென்று ரோட்டரியைத்தவிர்க்க முடியாததாக உருவாக்குங்கள்.

**Make Rotary simply irresistable** : உறுப்பினர்களை ரோட்டரியில் ஈடுபடுத்துவது மற்றும் உறுப்பினர்களுடன் தொடர்பில் இருப்பது தான் ரோட்டரியின் எதிர்காலம். அது நமது சங்கங்களிருந்துதான் தொடங்குகிறது. பெரிய சங்கங்கள் உருவாவது தற்செயலாக ஏற்படுவது அல்ல. உங்கள் சங்கத்தலைவரிடம் பேசி உங்கள் தேவைகளைச் சொல்லி மற்றவர்களுடன் கூட்டு சேர்ந்து எல்லோரும் இணைந்து ஈடுபடும் வகையில் திட்டங்களை உருவாக்குங்கள்.

**Membership Satisfaction Survey:** உறுப்பினர்களின் திருப்தியை தெரிந்து கொள்ள ஆய்வு செய்யுங்கள். இதன் மூலம் உறுப்பினர்களின் எண்ணங்களை புரிந்து கொண்டு, புதிய வழிகளில் செயல்படுத்தவும். சங்கம் நன்றாக வளரும், ரோட்டரி உறுப்பினராக இருப்பதால், நமக்கு பல நன்மைகளும் அனுகூலங்களும் கிடைக்கப்பெறுகிறோம். சேவைத் திட்டங்களைப் பலப்படுத்தும் கருவிகள் முதல் தம் தொழில்வளர்ச்சிக்கான படிப்பு மற்றும் உறுப்பினர்களுக்கு குருவாக வழிகாட்டியாக இருக்க வாய்ப்புகள் கிடைக்கிறது. உறுப்பினராக விளங்குவதற்கு ஏராளமான காரணங்கள் உள்ளன.

நாம் என்ன செய்ய வேண்டும்? உறுப்பினராக இருப்பதால் உள்ள நன்மைகளை தெரிந்து கொள்ளுங்கள்.

**Diversity** : பன்முகத் தன்மை கொண்ட ரோட்டரியின் பலத்தைத் தெரிந்து கொள்ளவும். நாம் ரோட்டரிக்கு அறிமுகமானது நண்பர்கள் மூலம்தான். அவர்கள் நம்மைப் போலவே ஒரே மதிப்பு, பின்புலம், கல்வி மற்றும் ஒரே கண்ணோடம் உள்ளவர்களாக இருப்பார்கள். இதை விட ரோட்டரிக்கு பல வித்தியாசமான பின்புலங்கள், அனுபவங்கள், தொழில் துறையினர் மற்றும் வேறு கண்ணோட்டமுள்ளவர்களை அழைப்பதால் ரோட்டரி மேலும் வளரும். அவர்கள் நம்மைப் போல சமுதாயச் சேவை மனப்பான்மை உள்ளவர்கள். நம்முடன் சேர்ந்து செயல்வீரராக விளங்குவார்கள்.

உங்கள் பின் புலம், மற்றும் உங்கள் சங்கத்தின் மற்ற உறுப்பினர்களின் பின்புலங்கள் இல்லாதவர்களை ரோட்டரியில் சேர்ப்பதற்கு ஒரு சவாலாக நீங்கள் ஏற்றுக் கொள்ளுங்கள். நீங்கள் உங்கள் சங்கத்தை விரிவுபடுத்த விரும்பினால் **My Rotary**-ல் பல சாதனங்கள் உள்ளன. அவைகளைப் பயன்படுத்தவும்

செயல்முறை : மெம்பர்ஷிப் பல **Tools** பயன்படுத்தவும்.

**END POLIO NOW** முயற்சிகளில் இணைத்துக் கொள்ளுங்கள் ரோட்டரி உறுப்பினர் எண்ணிக்கை குறையாமல் காத்துக் கொள்வதாலும் ரோட்டரியின் வளர்ச்சியாலும் நாம் போலியோவைத் ஒழிக்கத்தொடர்ந்து போராடுவோம்.

பல வழிகளில் ஆதரவு தரலாம்.

**Polio Plus Society** யை உங்கள் சங்கம் அல்லது மாவட்டத்தில் துவக்குங்கள். அல்லது உறுப்பினராகச் சேருங்கள். பில்கேட்ஸ் அறக்கட்டளையினர் 2 :1 என்ற விகிதத்தில் நாம் வழங்கும் நிதிக்கு இணையாக வழங்குகிறார்கள்.. போலியோ ஒழிப்பு நிதிக்கு நாம் 50 மில்லியன் டாலர் வழங்கினால் கேட்ஸ் அறக்கட்டளை 100 மில்லியன் டாலர் வழங்கும். நமக்கு 150 மில்லியன் டாலர் நிதி கிடைக்கிறது. நிகழ்ச்சிகளையும், சேவைத் திட்டங்கங்களையும் செயல் படுத்தி மக்களிடம் போலியோ ஒழிப்பு விழிப்புணர்வை ஏற்படுத்தவும். **endpolio.org** வளைதளத்தில் சென்று தற்கால நிலையையும் போலியா ஒழிப்பு நடவடிக்கைகளையும் தெரிந்து

> நாம் என்ன செய்ய வேண்டும்? உறுப்பினராக இருப்பதால் உள்ள நன்மைகளை தெரிந்து கொள்ளுங்கள்.

கொள்ளுங்கள். எப்பொழுதும் போலியோ இல்லாமல் செய்வது நம்முடைய மனித நேய முன்னுரிமை. முழு உறுதி தேவை.

செயல்முறை: போலியோவை ஒழிக்க நன்கொடை வழங்குங்கள்.

உலகளவில் அமைதியை உருவாக்கவும்.

ரோட்டரி உறுப்பினர்களாகிய நம்மால் உலகில் அமைதியான சமுதாயத்தை உருவாக்க முடியும். முதல் படியாக **ROTARY POSITIVE PEACE ACADEMY** ல் உறுப்பினராக – **Peace Builder** ஆக இணையுங்கள். அல்லது உங்கள் மாவட்டம் சமாதானத்தை உருவாக்கும் மாவட்டமாக உருவாகட்டும். பிப்ரவரி 2025ல் துருக்கி இஸ்தான்புலில் நான் ஒரு **Rotary Peace Conference** நடத்தப் போகிறேன். அமைதியைக் கொண்டாடவும், புதிய **Rotary Peace Center** ஐத் துவக்கத்தை முன்னிட்டு நடத்தப்படுகிறது. பிரிந்து கிடக்கும் உலகில் நாம் எவ்வாறு சமாதானத்தை நிலைநிறுத்துவது குறித்து ஆராயவும் ,எவ்வாறு அமைதியின்மையை சரி செய்வது குறித்தும் தெரிந்து கொள்ள வாய்ப்பு கிடைக்கிறது.

செயல் முறை திட்டம்: **Peace Conference** குறித்து மேலும் தெரிந்து கொள்ளுங்கள்.

**Magic of Rotary:** மாற்றும் மந்திரம் : ரோட்டரி உறுப்பினர்களும், சமுதாயத் தலைவர்களும் ஒன்றுகூடி பிரச்னைகளுக்குத் தீர்வு காணவும், வாழ்க்கையில் மாற்றங்களை ஏற்படுத்தவும் உழைக்கும் போது ரோட்டரியின் – **Magic of Rotary** - மாற்றும் மந்திரத்தின் தாக்கம் தெரியும். இது உங்களிடமிருந்து தொடங்குகிறது.



Rotary

RI Director 2023-25
# Anirudha Raychowdhury
Message



> ரோட்டரியின் மாயாஜாலத்தை தொடங்கி, வெகு தொலைவில் எதிரொலிக்கும் நேர்மறையான மாற்றத்தின் அலைகளை உருவாக்குவதற்கான தருணம் இது.

நம் அனுபவமுள்ள உறுப்பினர்கள் ஒரு முக்கியப் பொறுப்பைக் கொண்டுள்ளனர்: அது புதிய உறுப்பினர்களை அன்புடன் வரவேற்பதும் மற்றும் சுறுசுறுப்பாக ஈடுபடுத்துவதுமாகும், தொடக்கத்திலிருந்தே அவர்கள் மதிப்பு மிக்கவர்களாகவும் ஒருங்கிணைந்தவர்களாகவும் உணருவதை உறுதிசெய்ய வேண்டும். ஒவ்வொரு உறுப்பினரும் ரோட்டரியில் ஒரு தனித்துவமான லட்சியத்துடன் இணைகிறார்கள்–அது சேவையின் மீதான ஆர்வம், கூட்டுறவுக்கான தேடுதல், நீடித்த நட்பை உருவாக்குவதற்கான விருப்பம் அல்லது தனிப்பட்ட வளர்ச்சிக்கான பயணம் என எதுவாகவும் இருக்கலாம்.

இந்த உந்துதல்களை வளர்ப்பது நமது கூட்டுக் கடமையாகும். அவர்கள் காலப்போக்கில் பரிணாம வளர்ச்சி பெறுகிறார்கள் என்பதைப் புரிந்து கொண்டு, ஒரு சங்கமாக நம்மை இணைக்கும் உறவுகளை பலப்படுத்த வேண்டும்.

திட்ட முன்னணி ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் செயல்திட்ட சாம்பியன்கள் போன்ற புதுமையான பாத்திரங்களை அறிமுகப்படுத்துவது, மூலோபாய வளர்ச்சி மற்றும் கூட்டுச் சாதனைக்கான நம் அர்ப்பணிப்பை எடுத்துக்காட்டுகிறது.

மாவட்டங்கள் மற்றும் சங்கங்கள் முழுவதும் நெருக்கமாகப் பணியாற்றுவதன் மூலம், லட்சியமான பன்னாட்டு இலக்குகளை அடைவதற்கும், ஒவ்வொரு சங்கம் மற்றும் உறுப்பினர்களுக்கும் எதிரொலிக்கும் செயல் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கும் தெளிவான பாதையை உருவாக்குவோம்.

இந்தப் புதிய ஆண்டைத் தழுவும்போது, அது தரும் புதிய வாய்ப்புகளைப் பயன்படுத்தி, தவிர்க்க முடியாத சவால்களை விடமுயற்சி மற்றும் புதுமையுடன் எதிர்கொள்வோம். இளைஞர் முயற்சிகள் மற்றும் ரோட்டரி சமூகப் படைகள் **(RCC)** முதல் பெருநிறுவனக் கூட்டணிகள், அரசாங்க ஒத்துழைப்புகள் மற்றும் **NGO** கூட்டாண்மைகள் வரை பல்வேறு துறைகளில் அதிநவீன தொழில்நுட்பங்களைத் தழுவி, கூட்டாண்மைகளை வளர்த்துக் கொள்ளுங்கள். இது நமது தாக்கத்தை அதிகரித்து சமூகத்தில் நமது நிலையை உயர்த்தும்.

நாம் மேற்கொள்ளும் பல திட்டங்களுக்கு மத்தியில், நமது உலகளாவிய தலைவரான ஸ்டெஃபனி அர்ச்சிக்கின் அழைப்புக்கு செவிசாய்ப்போம். நமது செயல் திட்டத்தின் உருமாறும் சக்தியை வெற்றிபெறச் செய்வோம். தொடர்ச்சிக்கும் மாற்றத்திற்கும் இடையே சமநிலையைக் கண்டறிந்து, நேர்மறையான அமைதிக்காகப் பணியாற்றுவோம்.

கடந்த கால சாதனைகளை முறியடிக்க நம்பிக்கையுடனும். உறுதியுடனும் எடுக்கப்பட்ட துணிச்சலான நடவடிக்கைகளால் இந்த ஆண்டு குறிக்கப்படட்டும்.

ரோட்டரியின் மாயாஜாலத்தை தொடங்கி, வெகு தொலைவில் எதிரொலிக்கும் நேர்மறையான மாற்றத்தின் அலைகளை உருவாக்குவதற்கான தருணம் இது.


நன்றி ரோட்டரி நியூஸ்

Rotary

District Governor 2982

# V. Sivakumar

Message



மாவட்டத்தை மிகச் சிறப்பாக வழி நடத்தி கொடுத்த மாவட்டத்தினுடைய முன்னாள் ஆளுநர்கள் அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றி. நமது மாவட்டம் 2982 – ஐ என்னுடன் சேர்ந்து பணி செய்து சேவை செய்ய உள்ள மாவட்டத்தினுடைய அனைத்து சங்கங்களினுடைய தலைவர்கள், செயலாளர்கள், மாவட்ட நிர்வாகிகள், சங்கத்தினுடைய முன்னாள் தலைவர்கள், சங்கத்தினுடைய உறுப்பினர்கள் இவர்களோடு சேர்ந்து பணி செய்ய உள்ள நமது மாவட்டத்தினுடைய உதவி ஆளுநர்கள் மாவட்ட தலைவர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் சிறப்பு மிகுந்த இந்த மாவட்டத்தை **Team Hope** என்ற பெயரில் ஒரு நம்பிக்கை அணியுடன் நாங்கள் பணி செய்வது மிக சந்தோசமாக இருக்கிறது. மேலும் சர்வதேச அமைப்பான நமது ரோட்டரி இயக்கத்தில் நமது மாவட்டத்தை சர்வதேச அரங்கத்திற்கு கொண்டு செல்ல வேண்டிய கடமை நம் ஒவ்வொரு உறுப்பினர்களுக்கும் இருக்கின்றது என்பதை நாம் அனைவரும் அறிந்து கொள்ள வேண்டும்.

தங்களுடைய பங்களிப்பை முழுமையாக அந்த சங்கத்திற்கு வழங்கும் பொழுது தான் அந்த சங்கம் சிறப்பாக இயங்கும், அந்த சங்கம் சிறப்பாக இயங்கும் பொழுது தான் அந்த சங்கத்தினுடைய வளர்ச்சி மாவட்டத்தினுடைய வளர்ச்சிக்கு மிக முக்கிய பங்கு வகிக்கும் என்பதால் சங்க உறுப்பினர்களை ரோட்டரி செயல்பாடுகளில் முழு ஈடுபாட்டுடன் செயல்படுத்த வேண்டியது தலைவராகிய உங்களுடைய கடமை என்பதை மறந்து விட வேண்டாம். மேலும் அனைத்து நிகழ்வுகளிலும் சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்டால் மட்டுமே சங்க உறுப்பினர்கள் சங்கத்தின் உடைய செயல்பாடுகளில் பயன்படுவார்கள்.

இலங்கையில் 2500 மிதிவண்டி வழங்கும் திட்டத்தை செயல்படுத்துவதற்கு மிகச் சிறப்பாக நம் மாவட்டத்தில் செயலாற்றிக் கொண்டிருக்கிறோம், அதற்கான நிதி திரட்டும் பணியும் நடந்து கொண்டிருக்கிறது. அந்த திட்டத்தில் **HOPE On Wheels** ஒவ்வொரு உறுப்பினரும், தங்களுடைய பங்களிப்பு வழங்கும்பொழுது அந்தத் திட்டம் மிகப்பெரிய வெற்றி பெறும் என்பது நம் அனைவரும் அறிந்ததே. மேலும் மாவட்டத்தினுடைய **Literacy Project** இன்றைய இளைய சமுதாயம் தான் நாளைய உலகை ஆளக்கூடிய சக்தி வாய்ந்தவர்கள். அவர்களுக்கு நல்லொழுக்கத்தையும், தேவை, தேவையில்லாத பயன்பாடு பற்றிய விஷயங்களை சொல்லிக் கொடுக்க வேண்டிய கடமை நம் போன்ற சமுதாய அமைப்பு மிகவும் உள்ளதால் இந்த வருடம் **Literacy** சம்பந்தமான திட்டத்திற்கு 700 பள்ளிகளை தேர்ந்தெடுத்து அந்த பள்ளிகளுக்கு விழிப்புணர்வு நிகழ்வுகளை வகுப்பறைகள் மூலமாக வழங்க உள்ளோம்.

அந்த திட்டத்திற்கும் தங்கள் சங்கம் முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று மாவட்ட ஆளுநராக கேட்டுக்கொள்கிறேன். மேலும் ரோட்டரியின் முதுகெலும்பு அறக்கட்டளை என்பது நம் அனைவரும் அறிந்ததே அந்த அறக்கட்டளைக்கு உறுப்பினர்கள் அனைவரும் பங்களிப்பு செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடு தங்களால் இயன்ற பங்கை அளிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் குறைந்தபட்சம் இந்திய மதிப்பில் 1000 ரூபாய் இந்த அறக்கட்டளைக்கு வழங்கி தங்களுடைய பங்களிப்பை நமது மாவட்டத்திற்கு அளிக்க வேண்டும்.

அதை ரோட்டரி அறக்கட்டளை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் அதனால் உறுப்பினர்கள் தங்களால் இயன்ற குறைந்தபட்ச ரூபாய் 1000 ரூபாய் நீங்கள் இந்த ரோட்டரி அறக்கட்டளைக்கு வழங்கி தங்கள் பங்களிப்பை உறுதி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் இந்த வருடம் போலியோவுக்கான நிதியை சங்கங்களின் பதவி ஏற்பு விழாவில் ஒரு கவர் வழங்கி அதில் அவர்களால் இயன்றஅன்பளிப்பு வழங்குமாறு கேட்டுக் கொண்டோம் அதில் மிகப்பெரிய சாதனையாக ஏறக்குறைய 10,000 டாலர் இந்திய மதிப்பில் 8.30 லட்ச ரூபாய் வசூல் செய்து கொடுத்து அதை ரோட்டரி போலியோ திட்டத்திற்கு வழங்கிய அனைத்து தலைவர்களுக்கும் அதற்கு நன்கொடை வழங்கிய அனைத்து உறுப்பினர்களுக்கும் என் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த மாவட்டத்தினுடைய வளர்ச்சிக்கு ஒவ்வொரு உறுப்பினர்களுக்கும் பங்கு இருக்கிறது என்பதை நான் அனைத்து இடங்களிலும் குறிப்பிட்டுள்ளது போல 2024-25 ஆண்டு தனிப்பட்ட ஒரு ஆளுநருடைய வருடமாகவோ, ஒரு தலைவருடைய வருடமாகவோ இருக்கக்கூடாது என்பதில் உறுதியாக இருந்து கொண்டு சுமார் 4000 உறுப்பினர்களைக் கொண்ட இந்த மாவட்டத்தினுடைய அனைத்து உறுப்பினர்களுடைய ஆண்டு இந்த 2024-25 ஆண்டு என்பதை மறக்கக்கூடாது தங்களுடைய ஒத்துழைப்பு வழங்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.

வரும் டிசம்பர் மாதம் நமது மாவட்டத்தினுடைய திருவிழாவான சங்கமித்ரா மாவட்ட மாநாடு நடைபெறுகிறது. பதிவு செய்த அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொண்டு தங்கள் குடும்பத்துடன் கலந்து கொள்ளுமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன் மேலும் பதிவு செய்யாதவர்கள் மிக விரைவாக பதிவு செய்து இந்த மாவட்ட மாநாடு வெற்றிகரமாக நடத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன் நன்றி வணக்கம்



Rotary

Editor

# P. Raja

District Head GML & Rotary News



பிறர் நலத்துக்கென்று பூரணமாக தங்களை அர்ப்பணித்துக் கொள்கிற மாணிக்க மனிதர்கள் இருப்பதால்தான் இவ்வுலகம் இன்னும் நிலையாக இயங்கிக் கொண்டிருக்கிறது

ரோட்டரி நண்பர்கள் அனைவருக்கும் வணக்கங்கள்

பன்னாட்டு அளவில் மாவட்ட அளவில் சங்க அளவில் நடைபெறும் நிகழ்வுகளையும் சேவை திட்டங்களையும் அனைவரின் பார்வைக்கு கொண்டு சேர்க்கக்கூடிய **GML** என்கிற பொறுப்பு மிக்க பணியை வழங்கியமைக்கு ஆளுநர் அவர்களுக்கு மனமார்ந்த நன்றிகள்

புதிய வடிவிலான **GML** வெளியிட வேண்டும் என்பது ஆளுநரின் ஆவல் இவ்விதழில்

**அனுபவம் அறிவோம்** என்ற தலைப்பில் நம்மிடையே வாழ்ந்து கொண்டிருக்கும் சாதனை மனிதர்களின் அனுபவங்களையும்

**சாதனைகளை போற்றுவோம்** என்கிற தலைப்பில் நமது மாவட்டத்தில் சங்கங்கள் செய்திட்ட சாதனை சேவை திட்டங்களையும்

**ஆரோக்கியம் அறிவோம்** என்கிற தலைப்பில் நமது ரோட்டரி நண்பர்களின் உடல் நலன் பேணிக் காக்கும் நோக்கத்தில் மருத்துவ தகவல்களும்

**சரித்திரம் பேசுவோம்** என்கிற தலைப்பில் நமது மாவட்டம் 2982 வில் உள்ள வரலாற்று சிறப்புமிக்க இடங்களின் தொகுப்பும் இடம்பெறவுள்ளது

நமது உயிர் மூச்சாக இருக்கும் ரோட்டரி **Ann & Annets** அவர்களின்

சாதனைகள் பற்றிய பதிவுகளும் வெளிவர உள்ளது. அவர்கள் கல்வியிலோ விளையாட்டிலோ ஓவியங்களிலோ மேலும் ஏதாவது சாதனைகள் செய்திருப்பேன் அவர்களின் சாதனைகள் இவ்விதலில் வெளியிட்டு பாராட்டப்படும்

***பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அது இன்றேல்***
***மண்புக்கு மாய்வது மண்***

*பிறர் நலத்துக்கென்று பூரணமாக தங்களை அர்ப்பணித்துக் கொள்கிற மாணிக்க மனிதர்கள் இருப்பதால்தான் இவ்வுலகம் இன்னும் நிலையாக இயங்கிக் கொண்டிருக்கிறது என்கிறது திருக்குறள்*

தமக்காக மட்டும் பாடுபடாமல் இந்த சமுதாயத்திற்காகவும் பாடுபடும் ரோட்டரி நண்பர்களுக்கு **GML** குழுவின் சார்பாக வணக்கங்கள் வாழ்த்துக்கள்

**GML** சிறப்புடன் வெளிவதற்கு உங்கள் அனைவரின் ஆதரவையும் ஒத்துழைப்பையும் **GML** குழு சார்பாக கேட்டுக்கொள்கிறோம்

**GML** சிறப்புடன் வெளிவருவதற்கு அயராது பாடுபடும் **GML** குழுவினருக்கு நன்றிகள்

**GML TEAM REGIONAL CO-ORDINATOR**

| | |
|---|---|
| Rtn. **RAMESH BABU**<br>Rotary Club of Ulundurpet | Rtn. **NP. RAMASAMY**<br>Rotary Club of Rasipuram |
| Rtn. **DHANASEKAR**<br>Rotary Club of Texcity | Rtn. **PARTHIBAN**<br>Rotary Club of Salem Galaxy |

Rtn. **JEEVITHA**
Rotary Club of Hosur



# Rtn. GANESH SHANKAR V

## Regional Co-ordinator 2024-25



அனைவருக்கும் வணக்கம் நான் உங்கள் வெ. கணேசஷ் சங்கர் நான் பிறந்து வளர்ந்தது எல்லாம் இரும்பு நகரமாம் சேலத்தில், படித்தது சிறுமலர் மேல்நிலைப்பள்ளி மற்றும் மாநகராட்சி மேல்நிலைப்பள்ளி சேலம். உயர்கல்வி கற்றது சேலம் அரசு கலைக் கல்லூரியில் B.Sc கணிதம் மற்றும் அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் MA வரலாறு படித்துள்ளேன்.

படிக்கும் காலத்திலேயே காப்பீட்டு துறையில் பகுதிநேர பணியாளராக பணியாற்றினேன். பின்னர் யுனைடெட் இந்தியா காப்பீட்டுக் கழகத்தில் சேர்ந்து "SENIOR CHIEF INSURANCE ADVISOR " ஆக கடந்த 38 ஆண்டுகளாக பணியாற்றிக் கொண்டிருக்கின்றேன்.

நான் பொது காப்பீட்டு இன்சூரன்ஸ்











துறையில் பல பட்டங்களைப் பெற்று காப்பீட்டு துறையில் சிறந்தத்தொரு ஞானத்தை பெற்றுள்ளேன். நான் காப்பீட்டிலே சிறிய வாகனமான TVS XL வாகனத்தில் இருந்து பறக்கும் விமானம் முதல் கடலில் செல்லும் கப்பல் வரை பலவகையான காப்பீடுகளை செய்துள்ளேன்.

இந்தத் துறையில் நான் அகில இந்திய அளவில் நடத்தப்படும் உயரிய விருதான TOP 50 காப்பீட்டு முகவர்களில் யில் எப்போதும் ஆல் இந்தியா ரேங்கில் TOP 10 முகவர்களில் ஒருவராக இன்று வரை இருந்துள்ளேன். பொது காப்பீட்டு துறையில் உள்ள அனைத்து விதமான பாலிசிகளிலும் நான் தேர்ச்சி பெற்று நமது சேலத்திலேயே தலைசிறந்த நிறுவனங்களாக திகழ்கின்ற TRIVENI EARTH MOVERS, SRI RANGANATHAN & CO, SHIVA GRANITES, SALEM ERODE TIRUPUR LAKSHMI COLOURS GROUP OF COMPANIES இதுபோல மிகச் சிறந்த பல நிறுவனங்களுக்கு பணியாற்றி உள்ளேன். அதுமட்டுமல்ல பல காப்பீட்டு முகவர்களை சிறந்த முறையில் பயிற்சி கொடுத்து தலை சிறந்த முகவர்களாக திகழ வழி நடத்திய உள்ளேன்.

எனது மனைவியின் பெயர் சுதா இவர் சிறந்த ஒரு இல்லத்தரசியாக திகழ்கிறார். இவரும் ரோட்டரி சங்கம் சேலம் ரூபாவதி என்கிற சங்கத்தை ஆரம்பித்து அதன் சாசன தலைவராக, சிறந்தத்தொரு சமுதாய பணி செய்துள்ளார். உதவி ஆளுநராகவும் சேவை செய்துள்ளார்.

எனக்கு இரண்டு மகன்கள் உள்ளனர். பெரியவர் பெயர் ஹரி ராஜ் இவர் BE SATHYABAMA UNIVERSITY படித்துள்ளார் இவர் தற்போது பெங்களூரிலே IBM SOFTWARE நிறுவனத்தில் SENIOR SOFTWARE ENGINEER ஆக பணியாற்றிக் கொண்டிருக்கிறார் மேலும் இவருக்கு BE FASHION TECHNOLOGY முடித்த ஜனனி என்ற மனைவியும் முகில் இனியன் சபரி ராஜ் என்ற இரண்டு மாதங்களே ஆன ஆண் குழந்தையும் உள்ளது. எனது இரண்டாவது மகன் சிவராஜ் இவரும் ஸ்ரீபெரும்புதூரில் உள்ள SRI VENKATESWARA ENGINEERING COLLEGE எல் பி இ படித்துள்ளார் தற்போது LTI SOFTWARE நிறுவனத்தில் SOFTWARE ENGINEER ஆக சென்னையில் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்.

நான் இந்த சமுதாயத்திற்கு என்னால் இயன்ற பணி செய்வதற்காக ரோட்டரி என்ற மாபெரும் இயக்கத்தில் என்னை 2008 ஆம் ஆண்டு சேலம் வடக்கு ரோட்டரி சங்கத்தில் உறுப்பினராக இணைத்துக் கொண்டேன் பின் வடக்கு ரோட்டரி சங்கத்தில் 48வது தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டு பல அரிய பல திட்டங்களையும், சங்கத்திற்கு பெருமை தேடித் தரும் வகையில் மாவட்டத்தின் உயரிய விருதான அவ்வாண்டின் தலைசிறந்த சங்கமாக பல உயரிய விருதுகளைப் பெற்றுக் கொடுத்துள்ளேன்.

சங்கத்தில் நட்பு உரையாடுவதற்காக ஒவ்வொரு உறுப்பினர்களின் பிறந்தநாள் திருமண நாள் நிகழ்ச்சியின் போது அவர்களின் இல்லம் தேடி சென்று அவர்களை கௌரவப்படுத்தி உள்ளேன் மேலும் சங்கத்தின் தீபாவளி




திருநாள் பொங்கல் திருநாள் புத்தாண்டு நிகழ்ச்சிகள் போன்றவற்றை மிக சிறப்பாக ஊர் போற்றும் வகையில் செய்துள்ளேன்.

அதுமட்டுமல்லாமல் இந்த சமுதாயத்திற்கும் சிறந்தத்தொரு பணியாற்றி இருக்கின்றேன். மேலும் ரோட்டரி என்ற மாபெரும் இயக்கத்தில் 2020 21 ஆம் ஆண்டுக்கான உதவி ஆளுநராகவும் இருந்து மிக சிறந்த முறையில் பணியாற்றி உள்ளேன்.

அதுமட்டுமல்ல தற்போது மண்டல ஒருங்கிணைப்பாளராகஇருந்து இவ்வாண்டு ரோட்டரி வரலாற்றிலேயே தலைசிறந்த மாவட்டமாக திகழ என்னால் ஆன அனைத்து பணிகளையும் திறம்பட செயல்படுத்த உள்ளேன். ●







# Rtn. PILLAI MANOJ SHIVSHANKER

# Assistant Governor - Zone -4

Born in 1972 in a small city called pthanamthitta in kerala and after completion of 5th standard settled in ahmedabad, gujarat. I do have a yonger sister settles in madhyapradesh as a principal. My mother radha s pillai is a house wife and father shivshanker pillai doing job in gujarat.

Completed my graduation in b.com and done my pgdbm from bhavans, ahmedabad, gujarat. Later on i have successfully completed my mba from anna university along with my job.

I can read write and speak in 5 languages like english, hindi, gujarati, malayalam and tamil along with that i can speak in marathi, punjabi, sindhi and understand kannada and marwadi.

At the age of 21 i have started my business by opening a computer centre in ahmedabad and after completion of pgdbm got a job in gujarat spinner limited, bharuch, gujarat . I was there for three years and was given a post of sales executive looking after all india.

Later on i was tranfer as regional incharge for south and looking after the agents in south. After that i have joined southern synthetics ltd, erode.

In 2001 i have got married to remya from kerala at the age of 29 and was blessed with two sons in 2002 harishanker and 2006 sreeshanker.


I have left southern synthetucs and joined harmony yarns pvt. Ltd for better prospects and was there till 2010.

As i have got good influence with the parties of salem and surroundings i have started my own business in the name of sreehari textiles and lateron second company called S.R.Textiles.

Both are yarn trading companies procuring yarns from north india as it is the hub for synthetic yarns and sells it here having a strong customer base of more than 250 clients.

I have gone through all the ups and downs in my entire life. My saddest moment was when i lost my father in 2016.

My rotary journey started in the year 2016 with rotary club of salem texcity with the help of rtn.suriyanarayan who took initiative to install me as a proud member of texcity during the period of rtn.veeraraghavan.





I always had a instict of serving the poor through out my life all alone and after joing the club i have a got a chance to serve the society in better way along with the members of texcity.

I was always a active member in the club since my joining and recognising my capacity and dedication i have been selected as secretary to rtn suriyanarayan during the period of 2020-21. Even after it was the period of covid we have done more than 58 projects and we secured 19 awards along with the prestigious citation awards and i have been honoured best secretary during that period. We have also got a chance to conduct a seminar call nighil in raddison hotel with the great support of all the club members and our current DGE Rtn V.Sivakumar.





My golden period as a president was during 2021-22 with all the support from our dg rtn sundaralingam, that shines with all the support from my past presidents and club members. I am proud to say that during my period our club have received 29 awards along with the prestigious citation award from rotary international. During my period we have done more than 69 projects with an estimation of more than 20 lakhs. In that period only we have contributed 6 lakhs for rotary covid hospital and successfully completed a seminar called sunai in yercaud. My period will always be written in golden line as one of the best club in the district and i have been awarded with best president in zone and star president in district. During my period only our club's graph has gone to the peak and still we are maintaining it. I could recognise my leadership qualities during my presidential ship period. Thanks to rotary for that.

My mantra to success is dedication and time management. You can success in life with this even in family,business, society and rotary. I have experienced the friendship and fellowship only in rotary which makes rotary grow and binded.

Without the support of your family you cannot succeed. There is a saying called every successful man there is a lady behind it. And my wife is a great example for that. Even my children was a great support throughout my achievements.








# Rtn. SUBANGI SELVAKUMAR

# Assistant Governor - Zone -12

Rotary opened oppurtunities until it helped me spread the magic of rotary.

Born in chennai to my beloved parents d viswanathan and rani viswanathan as their first child, older to a brother V.Gunasekaran, now an auto consultant and a sister v karthiyayini, now, the principal of siddharth village school: that too in a joint family was the foundation of what i am today. Educated in new delhi – my primary schooling : secondary schooling in our lady's matriculation school, chennai and senior secondary school at fatima matriculation higher secondary school, chennai. Started my bachelor's degree in economics in gujarat but couldn't complete as my father got transferred to hosur.

I joined government arts college, krishnagiri and commenced my ba english degree. Now you get to know how i know tamil english, hindi, telegu, kannada, gujarati and sanskrit etc.

Mr. M.Selvakumar , one of the leading business person, even then, found his life in me and married me when i was in my second semester and soon we were blessed with two children s.navin khumar, now a mechanical engineer and joint managing director of msk group of companies: and ms revathy selvakumar, who is now a doctor pursuing her md in emergency medicine.

I then had an opportunity to complete my ba after my daughter's birth. Went on to study ma english from madras university, llb from bangalore university , llm(business law) from bangalore university as "university rank holder".

When everything was seeming well, tragedy stuck on me, i lost my father in an accident. Having been on bed for two and half years , i restarted my law career. Another tragedy struck me again, my husband had a heart attack in 2010 and again i was with him helping recover his health and business. Everything went on smooth until again god wanted increase my inner strength again. Another accident, another irrepairable loss, my mother. I lost her again in an accident,15 years after my father died. I had to witness both of them die in front of me . Again i was bedridden for three years. I stood up again. Restarted my law career.

I started an enterprise "sslawman outsourcing solutions p ltd', in bangalore, a legal process outsourcing company with the united states of america for three years. Then covid attacked us together and we were both fighting for life again. I had to close my company.

God brought us through and held me in the hands of my angels rtn ranjana patel & rtn latha ravi who held my arms and brought me into this beautiful heaven on earth- rotary club of hosur angels.

A person who has lost most of all that i had, was feeling full with possibilities and hope. This was in 2020 when i joined as a charter member in rc hosur angels.

I was given an opportunity to lead the club in 21-22 as a smart president under the leadership of the then district governor rtn sundaralingam. My life started changing gears, i bagged the star president award that year and 24 awards for our club too. There are so many memories that keeps me going on in life. It was at this moment i decided to stand for women who are in need of support to create a niche for themselves. Now i am selected for the new responsibility as assistant governor. My sincere gratitude to our district governor rtn v sivakumar for giving me an opportunity to spread 'the magic of rotary'.




Here again tragedy stuck on me .my husband had his second heart attack but he is safe now. I am sure this magic happened only because of our service in rotary since 1997. As rightly said by our ri president stephanie urchick, i am spreading the "magic of rotary'. I was lucky enough to meet ripe then stephanie urchick in bangalore: one of my most cherished moments in life.

Oh so much rotary has given . What is that i can offer except these that i have learned through my life. Here i am, ready to offer my acquired knowledge and skills for the benefit of people around the world.

Here i am & my accomplishments

1. Member of Hosur Bar Association
2. Member of International Council of Jurists, LONDON.
3. National SECRETARY National Forum for People's Rights ( an NGO)
4. Social worker and activist (Doing legal awareness programmes and also empowering people against abuse )
5. Soft Skill Trainer
6. Train the trainer
7. The People's Society of Hosur- Secretary
8. Master Trainer - Police Wellbeing program by TN Government
9. Rotary club of Hosur Angels- President 2021-22
10. Director- MSK group of Industries
11. POSH Trainer
12. Pranic Healer
13. Theta Healer
14. Soft Skill Trainer- MGR COLLEGE OF ARTS & SCIENCE, HOSUR
15. Counsellor - Child, Family, Career etc
16. Motivational speaker & Life Coach
17. Member IMC- INSTITUTE MANAGEMENT COMMITTEE OF Govt ITI HOSUR
18. FOT - faculty of training ROTARY LEADERSHIP INSTITUTE
19. JCI ZONE TRAINER

**ACHIEVEMENT**

1. Global peace leader for International Atrocity prevention and Human Rights Forum
2. Makkal Sevagi Nayaki Award
3. Women of Excellence Award
4. Sheroes Achievers Award- Advocate

**TAKE RESPONSIBILITY, TRUST AND HAVE FAITH IN YOURSELF THAT YOU CAN OFFER THE WORLD SOMETHING THAT NO ONE HAS EVER KNOWN**






சரித்திரம் பேசுவோம்


# செஞ்சி கோட்டை

தமிழகத்தின் மிக சிறந்த சுற்றுத்தலாத் தலமாக திகழ்வது விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள செஞ்சி கோட்டை. சுமார் 830 ஆண்டுகள் பழமை வாய்ந்த வரலாற்று புகழ்ப் பெற்ற இந்த செஞ்சி கோட்டை என்பது சோழர்காலத்தில் சிங்கபுரி என இருந்துள்ளது. இந்த பெயர் நாளடைவில் செஞ்சியாக மாறி உள்ளது. சோழர்களுக்கு பின்னர் ஆனந்தகோன் என்ற குறுநில மன்னர் காலமான 13ம் நூற்றாண்டில் கோன் ராஜ வம்சத்தால் இந்த செஞ்சி கோட்டை கட்டப்பட்டுள்ளது.

ஆனந்தகோன் எனும் மன்னரால் கட்டப்பட்டு பின்னர் கிருஷ்ணகோன் எனும் மன்னரால் விரிவு படுத்தப்பட்டுள்ளது. சுமார் 13 கிலோ மீட்டர் சுற்றளவில் மூன்று மலைகளை அரண்களாக கொண்டு இந்த செஞ்சி கோட்டை கட்டப்பட்டுள்ளது. இந்த செஞ்சி கோட்டையை இந்தியாவின் தலை சிறந்த உட்புக முடியாத கோட்டை என சத்திரபதி சிவாஜாயால் பாராட்டு பெற்றுள்ளது. ஆங்கிலேயர்கள் இந்த கோட்டையை கிழக்கின் ட்ராய் என அழைத்துள்ளனர்.

1690 ம் ஆண்டு முதல் 1697ம் ஆண்டுகளில் முகலாயர்கள் படை இந்த கோட்டையை முற்றுகையிட்ட போது சுமார் 3000 நாட்கள் இந்த கோட்டைக்குள் அவர்களால் உட்புக முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. வீரசிவாஜியின் இளைய மகன் ராஜாராம் இந்த கோட்டையில் தங்கி பின்னர் மகாராஷ்டிரா சென்று அங்கு மன்னராக பதவி ஏற்றுள்ளார்.. இதனை தொடர்ந்து 1698ம் ஆண்டுகளில் முகலாயர்கள் சார்பில் படை தளபதி ஸ்வரூப்சிங் இந்த கோட்டைய ஆண்டு வந்துள்ளதாக வரலாறு கூறுகிறது. பின்னர் அவரது மகன் ராஜா தேசிங்கு 1714ம் ஆண்டு பொறுப்பு ஏற்றுள்ளார்.

அவரிடம் ஆற்காடு நவாப் கப்பம் செலுத்துமாறு கேட்ட போது போர் மூண்டுள்ளது. சுமார் 80 ஆயிரம் குதிரைப்படை வீரர்களை கொண்ட ஆற்கா நவாப் படையை ஆயிரத்திற்கும் குறைவான







குதிரை வீரர்களை கொண்ட சிறிய படை கொண்டு மோதியதால் ராஜாதேசிங்கு வீர மரணம் அடைந்ததாக வரலாறு கூறுகிறது. இந்த செஞ்சி கோட்டை பல சிறப்பு அம்சங்களை கொண்டது. எட்டு மாடிகளை கொண்ட தர்பார் மண்டபம், நெற்களஞ்சியம், படை வீரர்களின் பயிற்சி கூடம், சிறைச்சாலை, குளம், செஞ்சியம்மன் கோயில், பீரங்கி மேடை, வெடிமருந்து கிடங்கு, காவல் அரண்கள், தோரணவாயில்கள், பாதாள சிறைச்சாலை, அகழி என கோட்டைக்கான அனைத்து சிறப்பு அம்சங்களும் கொண்டு சிறப்புடன் காட்சி அளித்து வருகிறது. இந்த செஞ்சி கோட்டையானது நாயக்கர்கள், பீஜப்பூர், சுல்தான், மராத்தியர்கள், முகலாயர்கள், ஆற்காடு நவாப், பிரஞ்சுப்படை, ஆங்கிலேயர்கள் என பல்வேறு அரச வம்சங்களை கொண்டு விளங்கி உள்ளது.

ஆங்கிலேயர்கள் இந்த கோட்டையை பெரிதும் பயன்படுத்தாதால் பின்னர் முக்கியத்துவம் இழந்து காணப்பட்டுள்ளது. விஜயநகர நாயக்கர்கள் தமிழ்நாட்டில் தஞ்சை, மதுரை, செஞ்சி ஆகிய இடங்களில் அதிக அளவில் பலப்படுத்தி ஆட்சி செய்து வந்துள்ளனர். 1921ம் ஆண்டு செஞ்சி கோட்டை தேசிய நினைவு சின்னமாக

**என். இரமேஷ்பாபு**
உளுந்தூர்பேட்டை

> ஓடிக்கொண்டே
> இருப்பது நதிக்கு அழகு
> உறுப்பினர்கள்
> சேர்க்கை பெருக்கமே
> சங்கங்களுக்கு
> உயிர் துடிப்பு

# N. செந்தில்குமார்

## DISTRICT COMMITTEE HEAD MEMBERSHIP DEVELOPMENT

1970 ஆம் வருடம் சேலம் மாவட்டம் ஆத்தூரில் பிறந்தவர் 1965 ஆம் வருடத்தில் இருந்து மோட்டார் வாகன துறையில் சிறந்து விளங்கும் ராதா & கோ-வின் நிறுவனர் திரு. கே நடராஜன் திருமதி ராதா அவர்களின் மகன் அமராவதி நகரில் உள்ள சைனிக் பள்ளியில் கல்வி பள்ளி கல்வியை முடித்து கர்நாடக மாநிலம் **Tumbore** நகரில் உள்ள **Siddha Ganga Institute of Technology**-யில் இன்ஜினியரிங் பயின்றவர். 1988 ஆம் ஆண்டில் நேஷனல் டிபன்ஸ் அகாடமிக்கு தேர்வு செய்யப்பட்டார், இவரது மனைவி பெயர் வேல்விழி.

புத்தகங்கள் படிப்பது இசையை கேட்டு மகிழ்வது வெளிநாடுகளுக்கு சுற்று பயணம் செய்வது இவரது பொழுது போக்கு

ஆத்தூர்A.நடராஜா ஆட்டோ ஹீரோ டூவீலர் மெயின் டீலர் நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் 1997 ஆம் ஆண்டு முதல் 27 வருடங்களாக சிறப்புடன் செயல்பட்டு வருகிறது

சமூக பணிகளில் ஆர்வம் உள்ள இவர் 2006 ஆம் ஆண்டு ஆத்தூர் ரோட்டரி சங்கத்தில் தன்னை இணைத்துக் கொண்ட இவர் ஒரு **MPHF** இதுவரை ரோட்டரி அறக்கட்டளைக்கு 8000 அமெரிக்க டாலர் பங்களிப்பு செய்துள்ளார்

சங்க அளவில் சேவை திட்ட இயக்குனராக பொருள் அல்லராக துணை தலைவர் பொறுப்புகளில் சிறப்புடன் செயல்பட்டு 2014 ஆம் ஆண்டின் தலைவராக பொறுப்பேற்று திறம்பட செயலாற்றினார்

வட்டார அளவில் பல பொறுப்புகளில் சிறப்புடன் செயல்பட்டுள்ளார்

2011-12 ஆம் ஆண்டின் டெஸ்லிக் டீம் ட்ரைனிங் செமினர் அபெக்ஸ் இன் செயலராக பணியாற்றியுள்ளார்.



**Position in Club Level**

Service Project Director 2007-08

Treasurer 2008-09

Vice President 2009-10

President 2010-11

**Position in District Level**

Secretary DTTS 2011--12

Served as Polio Plus & Surveillance 2013-14

Conference Committee Co Ordinator 2014-15

District New Generation Sports Promotion Chair 2015-16

District Chair Strengthening the Weaker Club 2017-18

Assistant Governor 2018-19

Assistant District Trainer 2019-20

Chairman Club Administration Seminar (ஆளுமை) 2020-21

Chairman Membership Development (சுரங்கம்) 2021-22

District Vocational Chair 2022-23

Chairman PETS & SETS (அரும்பு) 2023

He received best President the Award in 2010-11.

2018-19 துணை ஆளுநராக இருந்த போது இவரது மண்டலம் 6000 டாலர்களை ரோட்டரி அறக்கட்டளைக்கு வழங்கியது. **15% Membership Growth** நடைபெற்றது.

Social Activities :

உறுப்பினர் இந்திய செஞ்சிலுவை சங்கம், ஆத்தூர்

Co-Chairman MMA ஆத்தூர்

Life Member - Attur Tree Foundation

Zone President தமிழ்நாடு ஆட்டோமொபைல்ஸ் டீலர் அசோசியேசன்.



மாபெரும் ரோட்டரி சங்கத்தின் சேவைகள் மாவட்டத்தின் அனைத்து பகுதி மக்களுக்கும் சென்று சேர வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் 2982 மாவட்டத்தின் ரோட்டரி சங்கங்கள் இல்லாத ஊர்களை தேர்வு செய்து புதிய சங்கங்களை உருவாக்க வேண்டும் என்பது இவரின் இவ்வருட இலக்கு.



# AGTS - 1

**3rd NOVEMBER 2023**

**CLIFF VIEW RESORT,** Yercaud.















# PETS & SETS - 1

**03 DECEMBER 2023**

**HOTEL RADISSON,** Salem.













# PETS & SETS - 2

**26 & 27 JANUARY 2024**

**SRILANKA**























# GRADUATION

**03 MARCH 2024**

**SELVAMATHI FARM RESORTS**

**SALEM**






# DOLS & DLA

**14 & 15 JUNE 2024**

**YERCAUD**















# புற்றுநோய் : அரிய தகவல்கள் / அறியாத பக்கங்கள்

சில ஆண்டுகள் முன் உலகையே அச்சுறுத்திய கொரோனாவை போல், காலம் காலமாக மனித இனத்தை அச்சுறுத்திக் கொண்டிருப்பது புற்றுநோய். மாரடைப்புக்கு அடுத்தபடியாக மனித இனத்தின் மரணத்திற்கு முக்கியக் காரணம் புற்றுநோய்.

140 கோடிக்கும் அதிகமான மக்கள்தொகை கொண்ட இந்தியா, எதிர்காலத்தில் உலகின் புற்றுநோயின் தலைநகராக மாறும் வாய்ப்புள்ளது. இந்திய மக்கள் தொகையில் பெரும்பாலும் இளைஞர்களாக இருப்பதால், இளம் வயதினரில் (15 முதல் -39 வரை) அதிக அளவில் புற்றுநோய் பாதிப்புகளை கண்டறிவதில் ஆச்சரியமில்லை.

## புற்றுநோய் என்றல் என்ன?


புற்றுநோய் என்பது உடலின் சில செல்கள் கட்டுபாடு இன்றி வளர்ந்து உடலின் மற்ற பகுதிகளுக்கு பரவும் ஒரு நோயாகும். உடலின் செல் வளர்ந்து குறிப்பிட்ட காலம் கழித்து இறந்து பின் புதிதாய் பிறக்கும். இச்செயல்முறையில் மாறுபட்டு இறந்த செல்கள் உடலில் தேங்கி கட்டி, வீக்கம் போன்ற அறிகுறிகளுடன் ஊடுருவி, ஏனைய உடற்பகுதிகளுக்கும் பரவும் ஆற்றலைக் கொண்டிருப்பின் அவை புற்றுநோய் எனப்படும்.

### பொதுவான அறிகுறிகள் :

- அதிகப்படியாக காரணமின்றி உடல் எடை குறைதல்.
- இயற்கை துவாரங்களில் இருந்து இரத்த கசிவு / நீர் வெளியேற்றம்.
- நாள்பட்ட காய்ச்சல் / உடல் சோர்வு.
- நிணநீர் சுரப்பிகள் திடீரென்று பெரிதாகுதல்.
- வலியில்லாத நாள்பட்ட கட்டி/வீக்கம்
- மச்சத்தின் அளவு மாறுதல்.
- நரம்பியல் குறைபாடுகள்.

### பரிசோதனை முறைகள்:

- கட்டியில் சதைப் பரிசோதனை (மொத்தமாக / பகுதியாக)
- எண்டோஸ்கோபி பரிசோதனைகள்
- ஸ்கேன் - CT / MRI / PETCT
- நோய்க்கு ஏற்றவாறு தக்க பரிசோதனைகள்





## புற்றுநோய் சிகிச்சை முறைகள்

- மருத்துவ புற்றுநோய் சிகிச்சை

  கீமோதெரபி மூலம் சக்திவாய்ந்த மருந்துகளைப் பயன்படுத்தி வளரும் புற்றுநோய் செல்களை அழித்தல்.
- புற்றுநோய் அறுவை சிகிச்சை

  புற்றுநோய் கட்டிகளை கண்டறிந்து அறுவை சிகிச்சை மூலம் அகற்றுதல்
- கதிர்வீச்சு புற்றுநோய் சிகிச்சை

  அணுக் கதிர்களை மருத்துவ இயந்திரங்களைக் கொண்டு, உடலில் புற்றுநோய் கண்டறிந்த இடத்தில் செலுத்தி புற்றுநோய் செல்களை செயலிழக்கச் செய்தல் மற்றும் அழித்தல்.
- அணுக்கரு துறை

  பெட்-சிடி, ஸ்பெக்ட் (காமா) ஸ்கேன் மூலம் புற்றுநோயின் அளவு தன்மை மற்றும் அதன் செல்களை கண்டறிதல்

  இங்கு முதலில் ஒருவருக்கு எவ்விதமான புற்றுநோய் என பரிசோதனைகள் மூலம் கண்டறிந்து, அப்புற்றுநோயினை ஒன்றோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட (மேற்குறிப்பிட்ட) புற்றுநோய் துறையின் மருத்துவ வல்லுநர்கள் உதவியோடு கட்டுப்படுத்த முடியும், குணப்படுத்தவும் முடியும்.

## சிறப்பபு சிகிச்சைகள் :


மேற்குறிப்பிட்ட அனைத்து புற்றுநோய்களுக்கான சிகிச்சைக்கள் சேலத்திலேயே அதிநவீன புற்றுநோய் சிகிச்சை அளிக்கும் கதிர்வீச்சு கருவி (TrueBeam STX Lineac Accelerator) மற்றும் BRACHY THERAPY வசதிகளுடன், வெவ்வேறு வகையான புற்றுநோய்களை கண்டறியும் கருவிகளான PET-CT, SPECT (GAMMA CAMERA), போன்ற வசதிகள் நிறுவப்பட்டுள்ளது.

புற்றுநோய் கண்டறியும் பெட்-சிடி. பரிசோதனைகள், கதிர்வீச்சு சிகிச்சைகள் தமிழக முதலமைச்சர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் இலவசமாக செய்யப்படுகிறது.

## உளவியல் பராமரிப்பு :

புற்றுநோய் பாதிப்புக்கு உள்ளாகி சிகிச்சை மேற்கொண் டோருக்கு , நோயினாலும், சிகிச்சையினாலும்
கல்வி பயில்வதில் சிக்கல் / தடுமாற்றம்
மனதளவில் தொய்வு / மனத்தளர்ச்சி
கருவுறுதல் - விந்தணு குறைபாடுகள்
மண வாழ்வில் சிக்கல்
வேலைவாய்ப்பில் சிக்கல்
போன்ற வெவ்வேறு பிரச்சனைகள் உருவாகலாம் என்பதால், அதனை கணித்து முன்கூட்டியே முறையான கவுன்சிலிங் மற்றும் தடுப்பு முயற்சிகள் செய்வதோடு இது ஒரு 'நோய்த்தொற்று' இல்லை என்பதை நாம் அனைவரும் அவர்களுக்கு உறுதியளித்து, உறுதுணையாய் இருக்க வேண்டும்.

மேலும், சரியான நேரத்தில் சரியான மருத்துவத்தை, அத்துறைச் சார்ந்த புற்றுநோய் மருத்துவர்களிடம் உரிய ஆலோசனை பெற்று சிகிச்சை அளித்தால், புற்றுநோயை கட்டுப்படுத்துவது மட்டுமின்றி முழுமையாக குணப்படுத்தவும் முடியும்.






மருத்துவர். V. செல்வராஜா
நிர்வாக இயக்குனர், தரண் மருத்துவமனை
சீலநாயக்கன்பட்டி, சேலம்.



ENRICHING
Lives
Dharan Hospital
Dharan WOMENS CARE
FERTILITY CENTRE
Dharan CANCER SPECIALITY CENTRE
Excellence in Cancer Care
Dharan Educational Charitable Trust
Redefining healthcare education
Premium Store
Dharan Natural Stone Park
Your dream space
Economical Store
D-CERAMIC
Transforming Living Spaces
Dharan Rock
14, Seelanaickenpatty By-Pass, Salem - 636 201. 0427-2709999/2281599 95850 69990
info@dharanhospital.com www.dharanhospital.com




Selva Maligai®
GOLD ★ DIAMOND ★ SILVER ★ PLATINUM ★ GIFTS
SALEM HARUR DHARMAPURI
73 Years of Golden Service


Shevaroys
Your home in the hills
Newly Renovated Rooms
Green Environment
4x4 JEEP Ride
Kids Outdoor Play Area
Multi cuisine Restaurant, Restobar and Spa
Indoor Play Area
Family Games
Wedding/Conference hall 350 pax capacity
Birds Park
Natural Environment
Bon Fire
+91 99449 99599, 99449 99569
reservations@hotelshevaroys.com
www.hotelshevaroys.com
Yercaud, Tamil Nadu - 636601. Ph : 04281-222383


Furniture
THAT ENHANCES
THE BEAUTY OF YOUR HOME
Rtn. V. SIVAKUMAR
District Governor - 2982, 2024-25
224/3A, Meyyanur Main Road,
Near SS Power Services, Salem - 636 004.
E-mail : smarthomestylesmart@gmail.com
97866 77011
SMART
Furniture
Lites - Furnitures - Home Decors

# பிதாமகள்



சரியாக வாறப்படாத தலைமுடி, சுடுகாட்டு மண்ணும், சாம்பலும் அப்பிக்கொண்டிருந்த முகத்தில் மனிதத்திற்கான புன்னகையை தாங்கிக்கொண்டு நம்மை வரவேற்றார் சீதா. எட்டு வயதில் தன் கண்முன்னே தன் தாய் மண்ணெண்ணெய் ஊற்றிக் கொண்டு துடிதுடித்து பிரிந்து போனதிலிருந்து கூடு இழந்த பறவையானார்.

அப்போதைய இடுகாட்டு பொறுப்பாளராக இருந்த இராஜம்மாள் என்பவர் இவரை தத்தெடுத்துக் கொள்ள பள்ளிப்படிப்பு ஏதுமின்றி, 22 வருடங்களாக இடுகாட்டில் தனி ஒருத்தியாய் சடலங்களை இறக்கிப் புதைக்கும் பணியை செய்து கொண்டிருக்கும் இந்த பிதாமகள், இதுவரை அனாதை பிணங்கள், விபத்தில் அடிபட்டு அடையாளமற்ற சடலங்கள் என 20000 வரை அடக்கம் செய்திருப்பதாக சொல்லி திடுக்கிட வைக்கிறார்.

தவறான உறவுகளால் சமூகத்திற்கு அஞ்சி கொன்று குப்பைகளில், முட்புதர்களில், சாக்கடைகளில் வீசி எறியப்பட்ட குழந்தைகளுக்கு சுமக்காத தாயாகி மண்ணை சுமக்க வைக்கிறார்.

கொலை செய்யப்பட்டு கைப்பற்றப்பட்ட, யாரும் கண்டுகொள்ளப்படாமல் ஆளரவமற்ற இடத்தில் இறந்துகிடந்த நாட்பட்ட பிணங்களை பொதுவாக ஆண்களே மது அருந்திக்கொண்டு தான் கையாளுவார்கள். ஆனால் இவரோ அத்தனையும் சகித்துக் கொண்டு தனி ஒருத்தியாய் இந்த பணிகளை செய்வது பெண்ணியத்தின் உச்சம்.



தற்போதைய நிலையில் பெரும்பாலும் இறந்தவர்களை மின்மயானதிற்கு எடுத்துச் சென்று விடுவதால் இங்கே இடுகாட்டிற்கு பிணங்கள் கொண்டு வருவது மிகையாக குறைந்துள்ளது என்பதால் இவருக்கு வேலையும் வருமானமும் குறைந்தே போய் உள்ளது.

அரசு தரப்பில் எந்த வகையான உதவியும் இல்லாத சூழலில் இவரது நிலை சொந்த வீடு கூட இல்லாமல் பிணம் எரிப்பதால் வாடகை வீடு கூட கிடைப்பதில் சிக்கலுமான நிலையிலும் இருக்கிறார்.

இந்த சூழலில் நமது சேலம் ரோட்டரி ஹில் சிட்டி சங்கம் மாதம் ஆயிரம் ரூபாய் உதவித்தொகை வழங்கி வருவது மிகப்பெரிய உதவியாக அவருக்கு இருப்பதில் நாம் ரொட்டேரியன்கள் என்பதில் பெருமைபட்டுக் கொள்ளலாம்.

நமக்கு பேட்டியளித்துக் கொண்டிருக்கும் போதே அவருக்கு வந்த அழைப்பை ஏற்று பேசிய போது, அதிர்ச்சியும் கலக்கமும் நிறைந்த முகத்தோடு நம்மை திரும்பிப் பார்த்தார். ஒன்றரை வயது பச்சிளங்குழந்தை பிறந்ததிலிருந்தே ஏற்பட்ட உடல்நலக் குறைவினால் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டதாகவும், இன்னும் ஒரு மணி நேரத்தில் அந்த குழந்தையை இடுகாட்டுக்கு கொண்டு வருவதாகவும் சொல்லி கண்கலங்கினார்.

அவருக்கான வேலைக்கு வழிவிட்டபடி திரும்பியபோது, மயானம் தென்றலோடு கைக்குலுக்கிக் கொண்டிருக்கும் மரத்தின் இலைகளைப் போல அமைதியாக இருந்தது.

**சீதாவின் மனமோ புயலுக்கு அஞ்சி நிற்கும் மரத்தின் நிலையாய் நடுங்கி கொண்டே இருந்தது.**

கட்டுரை : மயோன் தனசேகரன்
ரோட்டரி கிளப் ஆ.ஃ.ப் டெக்ஸ்சிட்டி



# Rotaract News

